11வது ஆண்டில்

# உலக தமிழோசை

ULAKA THAMILOSZAI

விளம்பரம்

VLAMBARAM™

☎ 416-282-8059

416-282-4978

சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம்

நதி 11 JUNE 15, 2001 பாலம் 12



❊ வீடுக் கணனியை பராமரிப்பது எப்படி? (பக். 8)

❊ மனித வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்துவது.... (பக். 2)

❊ குடும்ப வாழ்க்கையும் யோகாசனமும் (பக். 13)

❊ ரெனிஸ் விளையாட்டில் "King Of Clay"... (பக்.6)

❊ கண்கள் சொல்லும் கதைகள்.... Dr. மூர்த்தி (பக். 5)

❊ கனடாவில் இரண்டு வித பெற்றோர்கள் (பக். 11)

❊ கடமையில் தலைமை இடம் பெறுபவர் யார்? (பக். 15)

❊ இராமன் ஒரு ஏலியனாக இருக்க முடியுமா? (பக். 9)

❊ முதல்தரமாக வீடு வாங்குபவர்களுக்குரிய சலுகைகள் (பக். 17)





RE/MAX
Crossroads Realty Inc.

வீடு விற்க வாங்க
பூரண ஆலோசனை
பெற நாடவேண்டியவர்

Raja M. Mahendran, P.Eng.
Sales Representative

MEMBER OF RE/MAX HALL OF FAME

Office: (416) 491-4002
Pager (416) 589-4270

MEMBER OF RE/MAX PLATINUM CLUB


## உலக நாடுகள் வரிசையில்
### ஜீமன் (YEMEN)

மத்திய கிழக்கு நாடுகளில் தெற்கு எல்லையாக ஓமான், சவுதிஅரேபியா ஆகிய நாடுகளை எல்லையாகவும், அராபிக் கடல், அடன் வளைகுடா கடல் ஆகிய கடல் எல்லையினையும் கொண்ட உலகத்தில் உள்ள வறுமை கோட்டினுள் உள்ள நாடுகளில் இதுவும் ஒன்றாகும். வறுமை கோட்டினுள் உள்ள நாடு ஆக இருப்பதால் இங்கு உல்லாச பிரயாளிகளுக்குரிய செலவுகளும் மிகவும் சிறிய தொகையாகவே இருக்கும்.

வடக்கு, தெற்கு ஆட்சி என செயல்ப்பட்ட அராபிக் நாடுகளில் ஒன்றான இந்நாடு அண்மையில் ஒரே நாடாக பிரகடனப்படுத்தப்பட்டது.

**மொத்த நிலப்பரப்பு:** 205,908 ச.மைல்
**மக்கள் சனத்தொகை:** 17 மில்லியன் பேர்
**தலைநகரம்:** சான்னா (SANNA)
**மொழி:** அராபிக்
**மதம்:** அனேகமாக நூறுவீதம் முஸ்லீம் மற்றும் மிக சிறிய அளவு கிறிஸ்தவர், இந்துக்கள் உள்ளனர்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## உன்னை அறிந்தால்

காற்றோடு பேசு....

காற்றில்லாத பூமியைக் கண்டு பிடிக்கலாமா? சாரமற்ற தொடர். பூமியிலுள்ள சகல உயிரினங்களும் பேச, கேட்க கண்ணிற்கு இதுவரை புலப்படாத ஒலி அலைகள் தேவை. நல்ல விடயங்களை கேட்க, பார்க்க, பேச வேண்டும் என்பதே உகந்தது. முரண்பாடுகளும் சில சந்தர்ப்பங்களில் புரிவதில்லை. காற்றோடு பேசு, ஒலி நாடா அண்மையில் என்னுடன் ஒலி அலையினூடாகப் பேசியது. காலம் கடந்த பேச்சாக இருந்தாலும் இன்னும் அது பேசுகின்றது, எவ்வளது காலம் பேசுமோ கடவுளிற்குத் தான் வெளிச்சம். சில வேளை எங்கள் தாய் பூமியிலிருந்து விலகி வேறு பூகோள அமைப்பில் பேசும் . இது உலக மொழி சகல அடிமைப்பட்ட இனங்களிற்காகவும் பேசும், பேசிக் கொண்டே இருக்கும். இது காலத்தின் நியதி. சிறந்ததொரு ஒலி இசை நாடாவைத் தந்த இதில் சம்பந்தப்பட்ட சகலரிற்கும் பாராட்டுகள், வாழ்த்துக்கள். இந்த செயல் தொடர வேண்டும். நான் அழிவேன் நாம் அழிவோம், காற்று அழியாது, காற்றோடு பேசு......
பேசிக் கொண்டே இருக்கும்....

நல்லதையே சிந்திப்போம், நல்லதையே செய்வோம். நாளை நமதே....

-நெற்றிக்கண்ணன்


இழந்த தலைமுடியை மீண்டும் பெற
வாருங்கள் சபோனாவிற்கு!

SABONA
& Gift

☎: (416) 264-8787
2602 Eglinton Ave.E.
Toronto, Ont.,M1K 2R9

☎: (416) 269-8151
www.sabona.ca
www.tamilclub.com/sabona


உண்மை வெறுப்பை வளர்க்கிறது. செல்வச் செழிப்பு செருக்கை வளர்க்கிறது. பாதுகாப்பு அபாயத்தை வளர்க்கிறது.

இலத்தீன்


Singapore Communication

FREE PAGER

-One Year Service $99.00
-Activation $25.00
-Free Panasonic Pager
More Info Call:
416-745-2378 (Sathi)
416-490-7703 (Praba)
416-589-4636 (Hot Line)

$35.00

100 Min Free
Mon-Fri 6pm-8am Free
Fri: 6pm - Mon 8am Free
400 First Incoming Min Free
C/W, C/F, Call ID Free
FREE GIFT AVAILABLE in store
HOT LINE: 416-980-4525



சிவாகம கிரியா பீடம்

☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை, கடை திறப்பு, லக்சுமி பூஜை, சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜை மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம், ஆயுஷ்ய ஹோமம், தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறை, தலைஅலங்கார ஜோடனை, ஜடை நாகம், ஆண்டாள் மாலை, தலைப்பாகை, பரத நாட்டிய அலங்கார ஆபரணங்கள் மற்றும் கல்யாண மண்டபம் போன்ற உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள். **சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள்** (கண்ணன் குருக்கள்) திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்

5 Greenleaf Terr., Scarborough, Ont.

துரித பணமாற்றுச் சேவை



வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

☎ (416) 267-8221

Insurance & Financial Services

Balan Kanapathi (Agent)



☞ Auto
☞ Home
☞ R.R.S.P
☞ Life
☞ Disability
☞ Mutual Fund
☞ Group Insurance
☞ Child Education
☞ Travel ☞ Business

London Life

LIBERTY MUTUAL.

© 416 291-0451 EXT. 286 / 905 294 2429 / 416 452 6975
10 MILNER BUSINESS COURT, SUIT 900, SCARBOROUGH



VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD.
TORONTO, ONT. M1B 5P9, CANADA

TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978
e-mail: vlambaram@email.com

# அறிவும் ஆக்கமும் (82)



-விஜே குலத்துங்கம்

திரைப்படங்கள் மனிதனின் வாழ்க்கையில் பெரும் தாக்கத்தை உண்டு பண்ணுகின்றன. 30 வருடங்களுக்கு முன்னர் Dollar Series என்ற கௌபோய் படங்கள் வந்தன. அதில் கதாநாயகனாக நடித்தவர் பிரபல ஹொலிவூட் நடிகரும் அமெரிக்காவில் செனெட்டர் பதவியை வகித்தவருமாகிய Clint Eastwood ஆவார். அவர் அந்த படங்களில் சுருட்டுதான் புகைப்பார். அந்தப் படங்கள் உலகம் பூராகவும் வெளியிடப்பட்டு பெரும் வரவேற்பைப் பெற்றது. அவற்றின் மூலம் பலர் கிளின்ற் வூட்டின் பரம இரசிகர்கள் ஆனார்கள். அது மாத்திரமல்ல அவரைப் போல் சுருட்டை புகைக்கவும் ஆரம்பித்தார்கள். இதனால் சிகரெட்டின் விற்பனை பெரிதும் பாதிக்கப்பட்டது.

1982 ஆம் ஆண்டு வெளிவந்த பிரபல இயக்குனர் ஸ்டீவன் ஸ்பில்பேர்க் இயக்கிய ET என்ற படம் ஒரு பெரிய வெற்றிப் படமாகும். அந்தப் படத்தில் வரும் வேற்றுக்கிரக உயிரான ET ஒரு காட்சியில் Reeves சொக்கலேற்று ஒன்றை கையில் எடுத்துக் கொண்டு ஒளிந்து விடும். ஒளிந்திருந்து வெளியே வரும் போது கையில் Reeves சொக்கலேற்று இருப்பதை தெளிவாகப் படத்தில் காட்டினார்கள். இந்தப் படத்தை அடுத்து Reeves சொக்கலேற்றின் விற்பனை 60 வீதத்தால் அதிகரித்தது. கனடாவைச் சேர்ந்த Mike Myer என்ற பிரபல நடிகர் Austin Powers என்ற படங்களில் நடித்தவர். இவர் ஒரே படத்தில் கதாநாயகனாக வில்லனாக இப்படியாக 3,4 வேடங்களை ஏற்று சற்றும் அடையாளம் காண முடியாதவாறு வெவ்வேறு உருவங்களில் வருவார். இந்த படத் தொடரில் இரண்டாவதாக வந்த படத்தில் இவர் ஒரு காட்சியில் Heineken என்ற பியர் போத்துடன் வருவார். அதை Hiney baby என்று சொல்லி சில செக்கன்களில் இந்த பியர் போத்தல் காட்சியில் தோன்றும். இந்தப் படம் வெளி வந்ததை அடுத்து இந்த பியரின் விற்பனை 15 வீதத்தால் அதிகரித்தது.

Charlies Angels என்ற படத்தில் வரும் நடிகைகளின் போன் மணி அடிக்கும் போது செல்லுலர் போனை கிட்டக் காட்டுவார்கள். அப்போது அது Nokia போன் என்று தெரியும். கடைசியாக வெளிவந்த James Bond படத்தில் James Bond பாவிப்பது ஒரு BMW கார் ஆகும். இதன் பின்னர் BMW காரின் விற்பனை அதிகரித்தது.

தென்னிந்தியத் தமிழ் படங்களும் சளைத்தவை அல்ல. உடுப்புகளுக்கும், சாரிகளுக்கும் நடிகைகளின் பெயர்களையும் திரைப்படங்களின் பெயர்களையும் வைப்பார்கள். இப்படியாக பல விதங்களில் திரைப்படங்களின் தாக்கம் உள்ளது. இதை உபயோகித்த வியாபார நிறுவனங்கள் தங்களின் பொருட்களை சந்தைப்படுத்த முயலுகின்றார்கள். இதைக் கூடுதலாக தொலைக்காட்சியில் தான் உபயோகிக்கின்றார்கள். தொலைக் காட்சியில் வரும் ஆங்கில பகல் நேர நாடகங்களில் வரும் நடிகைகளின் உடுப்புகள் பரபரப்பாக விற்பனையாகும். இதைவிட பொருட்களை விற்பதற்காக பிரத்தியேக தொலைக்காட்சி சனல்கள் உள்ளன. ஆனால் ஒருவரும் தொடர்ந்து இந்த சேவைகளை பார்க்க மாட்டார்கள்.

பொதுவாக வியாபாரங்கள் குறிப்பிட்ட கணப் பொழுதில் நுகர்வோரின் மனதைத் தொட்டு விற்பனை செய்யப்பட்டால்தான் அவை வெற்றி பெறும். அவர்களை சிறிது நேரம் சிந்திக்க விட்டால் மனத்தை மாற்றிவிடுவார்கள். இதனால் தான் தொலைக்காட்சி விளம்பரங்களில் உடனடியாக கீழ்காணும் தொலைபேசி இலக்கத்தை அழைத்தால் உங்கள் ஓடருக்கு மேலதிக இலவசப் பொருட்கள் வழங்கப்படும் என ஆசை காட்டுவார்கள்.

இந்த அடிப்படையில் இப்போது அமெரிக்காவில் ஒரு புதிய யுக்தியை தொலைக்காட்சியில் புகுத்த இருக்கின்றார்கள். விரைவில் தொலைக்காட்சிப்பெட்டி உங்கள் மின்கணணியுடன் பேசக் கூடியதாக வரும். அமெரிக்காவின் பிரபல தொலைக்காட்சி நிறுவனமான NBC தொலைக்காட்சி சேவை, Digital Convenience என்ற நிறுவனத்துடன் சேர்ந்து CueTV என்ற ஒரு சாதனத்தை உருவாக்கியுள்ளார்கள். இந்தக் கருவி தொலைக்காட்சிப் பெட்டியை உங்கள் மின்கணணியுடன் இணைக்கின்றது. தொலைக்காட்சியில் வரும் காட்சிகளில் சில சமிஞ்சைகளை புகுத்தி விடுவார்கள். உதாரணமாக காட்சியில் வரும் நடிகை ஒரு குறிப்பிட்ட உடையை அணிந்து வந்தால், அந்த உடுப்புக்காக புகுத்தப்பட்ட சமிஞ்சைகளை CueTV ஆனது மின்கணணிக்கு கடத்தும் போது மின்கணணியில் internet இல் அந்த உடுப்பை வாங்குவதற்கான இணைத் தளத்தை பார்க்கக் கூடியதாக வரும். எனவே உடனடியாக பொருட்களுக்கு ஓடர் கொடுத்துவிடலாம்.

இப்படியான முதலாவது நிகழ்ச்சி ஜீன், ஜீலை மாதங்களில் NBC தொலைக்காட்சிச் சேவையில் இடம் பெற இருக்கின்றது. இதனை ஊக்குவிக்க 400,000 டொலர்கள் பெறுமதியான பரிசில்களையும் வழங்க இருக்கின்றார்கள். ஆரம்பத்தில் அமெரிக்காவிலேயே இதனை முயற்சிக்கின்றார்கள். இதனை மேலும் ஊக்குவிக்க இந்தப் புதிய சாதனமான CueTV ஐ அமெரிக்காவில் உள்ள Radio Shack நிறுவனங்கள் ஊடாக, மக்களுக்கு இலவசமாக கொடுக்க இருக்கின்றார்கள்.

சென்ற வருடம் இந்த CueTV ஐத் தயாரித்த Digital Convenience என்ற நிறுவனம், கையில் பிடித்து இயக்கக் கூடிய Scanner ஒன்றை இலவசமாக கொடுத்தார்கள். இதன் மூலம் நீங்கள் வாங்கிய அல்லது காணும் பொருட்களில் உள்ள லேபில்களிலுள்ள BAR CODE இல் பிடித்தால் அந்தப் பொருளுக்குரிய வெப் தளத்தை தொலைக்காட்சியில் காணலாம். ஆனால் இந்தக் கருவி அவ்வளவு வெற்றியளிக்க இல்லை.

இந்த புதிய CueTV உம் எவ்வளவு தூரம் வெற்றியளிக்கும் என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். சிலரின் கருத்துப்படி தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருப்பவர்கள் அந்தக் காட்சியில் கவனம் செலுத்தாமல், அதைவிட்டு வெப்தளத்தில் பொருட்களை ஓடர் செய்ய முயல்வார்களா என்பத கேள்விக்குறிதான் என்று கூறுகின்றார்கள். எது எப்படியிருந்தாலும் விஞ்ஞான முன்னேற்றத்தினால் உருவாகியுள்ள இந்த புதிய சாதனம் நவீன வாழ்க்கையின் புதிய ஒரு அங்கமாகின்றது.

"ஆறிவும் ஆக்கமும்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான விடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை விஜே குலத்துங்கம் – 361 Highglen Ave, Markham, Ontario, L3S 3M2 என்ற முகவரிக்கு அல்லது **wijeyaku@ hotmail.com** என்ற முகவரிக்கு e-mail அனுப்பவும்.

13 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

**யோகாஸ்** புதிய இடத்தில்

☎: (416) 267-0408

## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 119

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | 3 | | ■ | 4 |
| | ■ | | ■ | | ■ | 5 | |
| | ■ | | ■ | 6 | | | |
| 7 | | | ■ | | ■ | ■ | ■ |
| ■ | ■ | ■ | ■ | | 8 | | 9 |
| 10 | | | | ■ | | ■ | |
| | ■ | ■ | ■ | 11 | ■ | ■ | |
| 12 | | | | | | | |

**இடமிருந்து - வலம்**

1. சொற்பொழிவு
5. சேர்
6. வீட்டின் முற்பகுதி
7. தலை
9. அன்பு (வல - இட)
10. செய்தி
12. கழுவாய்

**மேலிருந்து - கீழ்**

1. ஒளிவிடு
2. உதவி
3. ஆறு கடலுடன் கலக்கும் இடம்
4. வலிமை
5. பிழி
8. எப்பொழுதும்
9. காற்றாடி
11. தங்கு
12. பிறகு (கீழ் - மேல்)

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15. $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் JUNE 28, 2001க்கு முன்னர் விளம்பரம் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சு | ற் | று | ப் | பு | ற | ம் | ■ |
| ற் | ■ | ண | ■ | ட் | ■ | ■ | கு |
| று | ■ | கி | ட் | டி | ப் | பு | ள் |
| த் | ■ | ■ | ■ | ■ | ■ | கை | ■ |
| தா | வ | டி | ■ | ம் | ர | யி | வ |
| ர் | ■ | ண் | ■ | ■ | | லை | ■ |
| ■ | வ | ர | கு | ■ | பு | ■ | கோ |
| பு | லி | க | ளி | ன் | கு | ர | ல் |

**117இல் வெற்றி பெற்றோர்**

1) N. Leela Scarborough, Ont.
2) K. Nithiya Scarborough, Ont.

*ஆட்டிறைச்சி வியாபாரத்தல் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
* அன்றாட சந்தையில் மரக்கறி, மீன்வகைகளை தினம் தருவித்து வாடிக்கையாளர்களின தொகையில் உயர்ந்தவர்!
* வாடிக்கையாளர்களின் நன்மை கருதி புதிய இடத்தில்

*733 kennedy Road*
*[Ken-Mark Plaza]*

THE CHILDREN EDUCATION TRUST OF CANADA
(CET)
சீலன். A (சிவா)
TEL:(416) 451-0271 PAGER: (416) 980-9836
email: seelany2k@email.com

உங்கள் குழந்தையின் எதிர்கால கல்வியில் ஒரு சிறு தொகையை முதலிடுவதுடன் கனேடிய அரசின் கல்விக்கான மானியம் வருடத்திற்கு $400 இலவசம்



அரச அங்கிகாரம் பெற்ற புலமைப் பரிசில் சேமிப்பு திட்டம். (R.E.S.P)
THE ROYAL BANK
THE ROYAL TRUST
THE SCOTIA MCLEOD
TWO YEARS DIPLOMA ஐ வெற்றிகரமாக முடிப்பதன் மூலம் சகல புலமைப் பரிசில்களையும் பெற முடியும்.
இன்னும் பல சலுகைகள் உண்டு
உலகின் எந்தப் பாகத்திலும் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் கல்வி பெறலாம்.
இலவச ஆலோசனைகள் பெற எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம்
நாம் நமது குழந்தைகளை வளர்க்கத் தவறிவிட்டால அதனால் பாதிக்கப்படுபவர்கள் நமது பேரக் குழந்தைகளே!

# APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்


- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

SPECIAL



- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

ONTARIO'S DRIVE CLEAN Accredited Test & Repair Facility




**Tel: (416) 285-4998**

**2500 Lawrence Ave. East, Unit #11, Scarborough, ON**

Apple Apple Apple Apple Apple Apple Apple Apple

## துர்க்கை அம்மன் ரூர்ஸ்

ரொரன்ரோவிலிருந்து மொன்றியலுக்கு

மொன்றியலிருந்து ரொரன்ரோவுக்கு



அழையுங்கள்

☎416-283-3969

☎416-287-2824

மொன்றியல் ☎514-344-2591

## OODAM MAINTENANCE WORKS

Janitorial Services ("Sanitation for the Nation")



* KITCHEN RENOVATIONS
*BATHROOM REVOVATION
*TILES
*PLUMBING

>Railing >Fencing >Welding

Free Estimates

Pl. Call: Thamby - TEL./Fax: (416) **638-2796**

18 Brantley Cres. Downsview, NorthYork, M3J 1X5

தமிழர் நிர்வாகத்தில்



ஒரு


# EMBASSY

விசா கிடையாது, பாஸ்போட் வழங்கப்படமாட்டாது

ஆனால

- வீட்டிற்கு தேவையான தரமான உணவுப் பொருட்கள்,(Groceries)
- இலங்கை / இந்திய இனிப்புப் படையல் (Sweets)
- இலங்கை / இந்திய உணவகம் (Restaurant)

**5 SAMOSA $1.00**



Embassy அமைந்துள்ள இடம்: (FINCH / MIDDLEFIELD)

5200 FINCH AVE, SCARBOROUGH

☎ 416-332-8451

# ஒன்ராரியோ மாகாணத்தில் வாகனம் செலுத்துதல்?

- சிவ பஞ்சலிங்கம்



பகுதி(53)

## வாகனங்களை வீதியில் வைத்து சட்டரீதியான உத்தரவின் பிரகாரம் பொலீசாரால் பறிமுதல் செய்தல்

குற்றவியல் சட்டத்தின் கீழ் (Criminal Law) சாரதி அனுமதிப் பத்திரம் நீதிமன்றத்தினால் தடை செய்யப்பட்ட ஒருவர், அதாவது வாகனம் செலுத்தும் உரிமை மறுக்கப்பட்ட ஒருவர் வாகனத்தினை செலுத்திக் கொண்டு போகும் போது, கையும் மெய்யுமாக பொலீசாரால் பிடிபடும் போது உடனடியாக அவ் வாகனம் பறிமுதல் செய்யப்படும்.

அனேகமாக மது போதையில் வாகனம் செலுத்தி சாரதிப் பத்திரம் இரத்து செய்யப்பட்டவர்கள் ஆபத்தான வாகனம் ஓட்டுதல், விபத்து நடந்த இடத்தில் நிற்காமல் தப்பி ஓடியமை போன்ற குற்றச் சாட்டுகளில் சாரதி அனுமதிப் பத்திரம் இரத்துச் செய்யப்பட்டவர்களை உதாரணமாக இங்கு குறிப்பிடலாம்.

1996 ஆம் ஆண்டு புள்ளி விபரப்படி 37,000 பேர் ஒன்ராரியோ மாகாணத்தில் இவ்வாறு இத்தகைய வழிகளில் சாரதி அனுமதிப் பத்திரத்தினை இழந்தவர்கள் ஆவார்கள்.

1) வாகனம் பறிமுதல் என்பது எவ்வாறு முன் எடுத்துச் செல்லப்படும்?

வாகனம் செலத்திக் கொண்டிருப்பவரை வீதியில் வைத்து சந்தேகத்தில் பொலீசாரால் மறித்து சோதனை செய்யும் போது, லைசென்ஸ் இரத்து செய்யப்பட்ட நிலையில் வாகனம் செலுத்தியது தெரியவரும். வாகனம் செலுத்தியவருக்கு ஒரு தண்டனை ரிக்கற் கிடைக்கும். வாகனத்தினை கட்டி இழுக்கும் கம்பனிக்கு (Towing Company) பொலீசாரால் உத்தியோகத்தர் தொலைபேசியல் வீதியில் நின்று அழைத்து வர அவர்கள் வாகனத்தினை வந்து கட்டி இழுத்து சென்று தங்கள் இடத்தில் வைத்திருப்பார்கள்.

நாற்பத்தைந்து நாட்களுக்கு அவர்கள் தங்கள் இடத்தில் பொலீசாரின் சட்டரீதியான உத்தரவின் படி வாகனத்தினை வைத்திருப்பார்கள். அதன் பின்னர் கட்டி இழுத்து சென்ற செலவு உட்பட நாற்கத்தைந்து நாட்கள் வாகனத்தினை தங்கள் இடத்தில் வைத்திருந்த செலவுகள் யாவும் செலுத்திய பின்பு உரிமையாளர் தமது அத்தாட்சியினை காட்டி வாகனத்தினை மீட்டு எடுத்து வரலாம்.

2) வாகனத்தினை கட்டி இழுத்த செலவுகளும் அதனை நாற்பத்தைந்து நாட்கள் வைத்திருந்த செலவுகளும் மொத்தமாக எவ்வளவு ஏற்படும்?
ஆகக் கூடுதலாக $1100 டொலர் வரை எதிர்பார்க்கலாம்

3) சாரதி அனுமதிப் பத்திரத்தினை ஏற்கனவே சட்ட ரீதியாக இழந்து வாகனத்தினை செலுத்திக் கொண்டு சென்றவருக்கு பொலீசார் வீதியில் மறிக்கும் போது எவ்வளவு தொகைக்கு தண்டனை ரிக்கற் வழங்குவார்கள்?
$5000 டொலரிலிருந்து $50,000 வரை தண்டனை ரிக்கற் வழங்கப்படும்.

4) இவ் வாகனப் பறிமுதலுக்கு எதிராக சட்ட ரீதியாக அப்பீல் செய்ய முடியுமா?
ஆம். ஆனால் பின்வரும் காரணங்களில் ஏதாவது ஒன்று நிரூபிக்கப்பட்டாலேயே இவ் அப்பீல் வாகன உரிமையாளருக்கு வெற்றியாக அமையும்.

a) வாகனப் பறிமுதல் செய்த போது உண்மையில் வாகன உரிமையாளருக்கு தெரியாமல் அது எவரோ ஒரு திருடனால் திருடப்பட்டு செலுத்திக் கொண்டு போகும் போது, பறிமுதல் செய்யப்பட்டது என்பது நிரூபிக்கப்படும் போது,

b) சாரதி குற்றவியல் சட்டத்தின் கீழ் சாரதி அனுமதிப் பத்திரம் இரத்து செய்யப்படவில்லை எனபதனை நிரூபிக்கும் போது

(இங்கு முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது குற்றவியல் சட்டத்தில் தண்டிக்கப்பட்டு சாரதிப் பத்திரம் இரத்து செய்யப்பட்டவருக்கே இத் தண்டனை ஆகும்.

வேறு வழியில் சாரதிப் பத்திரம் இரத்து செய்யப்பட்டவர்கள் உதாரணமாக குறிப்பிட்ட காலத்தினுள் தண்டனைப் பணம் செலுத்த தவறியவர்கள் போன்றோருக்கும் சாரதிப் பத்திரம் அதனை மீளப் பெறும் வரை இரத்தச் செய்யப்பட்டிருக்கும். அது போல சாரதிப் பத்திரம் இல்லாதவர்கள் போன்றோர் இவ்வறு பிடிபடும் போது அதுவும் தண்டனைக்குரிய குற்றமாக கருதப்பட்டாலும் வாகனம் பறிமுதல் செய்யப்பட்டு நாற்பத்தைந்து நாட்களுக்கு வைத்திருக்கப்படவும் மாட்டாது. இவ்வாறு செலுத்தியவருக்கு ஒரு தண்டனைப் பண ரிக்கற் வழங்கப்பட்டாலும் அது பெரிய தொகையாகவும் இருக்கமாட்டாது.)

c) வாகன உரிமையாளர் வாகனத்தினை செலுத்திய சாரதி முறையான சாரதிப் பத்திரம் வைத்திருந்தார் என்பதனை நிரூபிக்கம் போது

5) இச் சட்ட ரீதியாக அப்பீல் செய்வதற்குரிய கட்டணம் எவ்வளவு?
நூறு டொலர்
அப்பீல் வெற்றியாக அல்லது சாதகமாக அமைந்து வீட்டில் இப் பணம் திருப்பி வழங்கப்படும்.

6) இந்த சந்தர்ப்பத்தில் வாகனத்தினை மாறிச் செலுத்தவோ அல்லது இரவல் வழங்குபவர்களோ யாது செய்ய வேண்டும்?
நண்பரோ, உறவினரோ அல்லது தொழிலாளியாக பணி புரிபவரோ எவராக இருந்தாலும் இவர்கள் உட்பட வாடகைக்கு கார் கொடுப்பவர்கள், குத்தகை ஒப்பந்தத்தில் வாகனங்கள் வழங்குபவர்கள் யாவரும் முதலில் வாகனம் செலுத்த போகின்றவரின் சாரதி அனுமதிப் பத்திரம் தொடர்பாக பின்வரும் தொலைபேசி இலக்கத்துக்கு எந்த நேரமும் அழைத்து பரிசீலனை செய்யலாம்.

1-900-565-6555 (இதற்கான சேவைக் கட்டணம் $2.50)

அல்லது

www.mto.gov.on.ca/english.dandv/

என்னும் மின்கணணி தொடர்பு மையத்துடன் தொடர்பு கொண்டும் பரிசீலனை செய்யலாம்.

7) இவ்வாறு இரவல் வாகனங்களை ஓட்டி செல்பவர் ஏதாவத விபத்தினை எதிர் கொண்டால் எவரை பாதிக்கும்?
வாகன உரிமையாளரின் காப்புறுதி திட்டத்தினூடாகவே கொடுப்பனவு நடந்து பின்னர் உரிமையாளரின மாதாந்த கட்டணம் அதிகரிக்கும் சந்தர்ப்பம் உண்டு.

**பினவரும் காரணங்களுக்காக ஒருவரது வாகன சாரதி அனுமதிப் பத்திரம் இரத்து செய்யப்படலாம்.**

* செலுத்தாத ரிக்கற் தண்டனைப் பணம் (வாகன தரிப்புகளில் வழங்கும் தண்டனை ரிக்கற் விதிவிலக்கு)
* மருத்துவ ரீதியான காரணங்கள்
* ஏதாவது மது போதைகளில் செலுத்தியது போன்ற குற்றச் சாட்டுகள்
* முழு புள்ளி மதிப்பீட்டு இழத்தல்
* சிவில் நீதிமன்றம் ஒன்றினால் வாகன விபத்தில் தீர்க்கப்பட்ட கட்டணத்தினை செலுத்த தவறியிருந்தால் (unpaid civil court judgement arising form a previous motor vehicle accident)
* வாகன விபத்து சட்டத்தின் பிரகாரம் ஏதாவத கோரிக்கைப் பணம் செலுத்த தவறுதல் (unpaid claim under the motor vehicle accident claims act)

தொடரும்....

மேலதிக தொடர்புகளிற்கு: சிவ பஞ்சலிங்கம் - (416) 321-0999
**(Professional Licensed Instructor In Car & Class Room)**

நம்பிக்கையின் மறுபெயர் சோதீஸ்

ACTION HONDA

HONDA வாகனங்களின் ஒரே தமிழ் விற்பனைப் பிரதிநிதி சோதீஸ் மூலம் உங்களின் புதிய, பழைய வாகனங்களை சிறந்த சேவையுடன் பெற்று உங்களின் சேமிப்பை உறுதிப்படுத்துங்கள்.



anytime: 416-704-1179 office:416-281-1234


மாத இறுதி மலிவு விற்பனை

இம்மாத ஸ்பெசல் 5.8%
FINANCIAL AND LEASE
ஸ்பெசல்
உங்களின் விருப்பத்திற்கு ஏற்ப சகல விதமான கார்களும் எம்மிடம் உண்டு

LIFE TIME OIL CHANGE

Bad Credit? I WILL HELP YOU

உங்களுக்காக காத்திருக்கும் நேரம்
Mon, Fri, Sat: 9am- 6pm
Tues, Wed: 12pm- 9pm
4334 Kingston Rd, Scarborough



# பழந்தமிழர் கலாச்சாரமும் அக்குபங்ஷர் வைத்தியமும்

பகுதி:- 14

*-Dr. N. S. Moorthy Ph.D*

## முகப்பரிசோதனை - கண்கள்



முகப்பரிசோதனையில் முக்கிய பங்கை வகிப்பது கண்கள் ஆகும். ஒரு மனிதனுக்கு உலகைப் பார்ப்பதற்கும் நல்லது தீயவற்றைக் கண்டு கொள்வதற்கும் முக்கிய புலன் உறுப்பாக விளங்கும் கண்களின் பெருமையை சொற்களில் அடக்க முடியாது. தமதுயிரினம் மேலாக தமது கணவனை மதிக்கும் பண்பாடு பண்டைத் தமிழ்ப் பெண்களின் தனிக் குணமாக இருந்ததை நமது பல்வேறு இலக்கியங்களும் கூறுகின்றன. கல்வி கற்பதற்கும் காதல் மொழி பேசுவதற்கும் மட்டுமன்றி உடலிலுள்ள நோய்களை அறிவதற்கும் மனநிலையை உணர்வதற்கும் உரிய முக்கிய உறுப்பாகவும் இவை விளங்குகின்றன என தமிழ் மருத்துவமும் சீன மருத்துவமும் இப்போதைய நவீன மருத்துவமும் கூறுகின்றன. பண்டைய தமிழ் மருத்துவத்தின் படி கண் பரிசோதனை EYE DIAGNOSIS ஒரு முக்கிய பரிசோதனை முறையாகக் கூறப்பட்டுள்ளது. வாதக் குணம் உடையவர்களின் கண்கள் சிறுத்தும் அடிக்கடி அசைந்து கொண்டும் இருப்பதும், கண் இமைகள் தொங்கிக் கொண்டும், இமைமயிர்கள் காய்ந்தும், குறைந்தும் காணப்படும். கண்ணின் வெண் பகுதி கலங்கியும் கண்மணியானது கறுப்பாகவோ அன்றி சாம்பல் கலந்த ஊதா நிறமாகவோ காணப்படும்.

பித்தப் பிரகிருதிகளின் கண்கள் நடுத்தர அளவுடன் கூர்மையாகவும் பளபளப்பாகவும் இருக்கும். வெளிச்சத்தைக் கண்டால் அதிகம் கூசுபவையாகவும் கண் இமைமயிர்கள் எண்ணைத் தன்மையுடன் எண்ணிக்கையில் குறைவாகவும் காணப்படும். கண்மணி மஞ்சள் கலந்த சிவப்பாக அல்லது தனிச் சிவப்பாகக் காணப்படும். கபத்தன்மை கூடியவர்களின் கண்களோ அளவவில் பெரியவையாகவும், அழகானவை யாகவும் மட்டுமன்றி ஈரத்தன்மையுடன் காணப்படும். இமைமயிர்கள் தடித்தும் எண்ணைத் தன்மையுடனும் நீண்டும் காணப்படும். அடிக்கடி மூடித்திறக்கும் சிறிய கண்கள் வாத குணம் மேலோங்கி நிற்பதைக் குறிப்பதுடன் அடிமனதில் பயம் நரம்புப் பலவீனம் அல்லது கவலை ஆகியவற்றைக் குறிக்கும். மேல் கண் இமை மனநிலையையும் பயத்தையும் தன்னம்பிக்கைக் குறைவையும் வெளிப்படுத்தும்.

கண்கள் வெளித்தள்ளிக் காணப்படுவது தைராய்டு (THYROID) சுரப்பியின் குறைப்பாட்டை விளக்கும். கண் மடல்களின் உட்புறம் வெளிறிக் காணப்படுவது இரத்தக் குறைபாட்டை (ANEMIA) தெரிவிக்கும். மஞ்சள் நிறமான கண்கள் ஈரல் தொழிற்பாட்டின் FAIT தெரியப்படுத்துகின்றன. கண்மணியின் அளவு நிறம் உருவம் ஆகியனவும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை ஆகும். சிறிய கண்மணி உடலிலுள்ள மூட்டுகளின் நோய்த்தன்மையை தெரிவிக்கும்.

கண்மணியைச் சுற்றி வெண்மையான வளையம் காணப்படுவது உடலுள் உப்பும் சீனித் தன்மையும் கூடிக் காணப்படுவதைத் தெரிவிக்கிறது. நடுத்தர வயதுள்ளவர்களின் கண்மணியில் இவ் வளையம் அதிக வெண்மையாக இவர்களில் காணப்பட்டால் மூட்டுக்களில் தேய்வு ஏற்படுவதை தெரிவிக்கின்றன. இவர்களுக்கு மூட்டுவலி வாதம் (ARTHRITIS) போன்ற நோய்கள் ஏற்படுவதுடன் எலும்பு முறிவுகளும் ஏற்பட சாத்தியமுண்டு. கண்மணிகளின் ஊதா நிறமான அல்லது கறுத்த புள்ளிகள் காணப்பட்டால் அவை குடற் பகுதி இரும்புச் சத்தை உறுஞ்சுவதில் உள்ள குறைபாட்டை தெரிவிக்கின்றன.

இக்கால மருத்துவத்தில் கூட நீரிழிவு (DIABETES) நோயின் தாக்கத்தை அறியவும் அதிக இரத்த அமுக்கத்தின் (High Blood Presure) தாக்கத்தை அறியவும் கண்கள் பரிசோதிக்கப்படுகின்றன. அதுமட்டுமின்றி இப்போது மேல் நாடுகளில் பிரபலமடைந்து வரும் கண்களை மட்டும் பார்த்து நோயறியும் முறையான iridilogy பல நல்ல பலன்களை அளித்து வருவதாகக் கூறப்படுகின்றன. இதுவும் பண்டைய மருத்துவ முறைகளில் ஒன்றாகும். கண்களின் நிறமான பகுதியான IRIS எனப்படும் பகுதியை IRIDOLOGIST என அழைக்கப்படும் பயிற்சி பெற்ற நிபுணர் நன்கு அவதானித்து உடலிலுள்ள நோய்களையும் சுக நிலையையும் கண்டுபடித்தலே இம் முறையாகும்.

தொடரும்......


**VIMAC HOME RENOVATIONS**

**SPECIALIZING IN INSTALLATION OF**

- KITCHEN CABINETS
- COUNTER TOPS
- SPACE MAKING CABINETS
- BATHROOM /LAUNDRY UNITS

**& GENERAL HOME RENOVATION**

**FREE ESTIMATE**

CONTACT : VIC AT BUSINESS: 416 266 6566
416 266 7227

REPLACE YOUR COUNTER TOPS & SINK AT REASONABLE RATES



**invis** Financial Group

As an Invis Mortgage consultant I take all your headache and of mortgage shopping for you

இன்பத் தமிழில் உரையாடி உங்கள் அனைத்து **Mortgage** தேவைகளையும் பெற்றிட அழையுங்கள்

- 5% முற்பணத்துடன் வீடு வாங்குவதற்கு
- Below bank rates
- 1st and 2nd mortgages

**kokila varathes**

@ 416-569-2141

vkokila@home.com


## புதிய வாகனம் வாங்கும் போது



புதிய வாகனங்களை நம்மவர்கள் பலர் நாளாந்தம் வாங்கிக் கொண்டுதான் இருக்கின்றனர். அப்படி வாங்குபவர்கள் சிலர் சிறந்த விலை (Best Price)? என்று கூறிக்கொண்டு அங்கும் இங்கும் ஓடித்திரிந்து நேரத்தையும் வீணாக்கி கடைசியில் எல்லோரையும் விட கூடுதலான பணத்தையும் இழக்கின்றனர். இதுவே உண்மை. அவர்களைத் திருத்தவும் முடியாது. திரிந்தவும் மாட்டார்கள். அவர்களைப் பற்றியல்லாமல், இக்கட்டுரையானது மிகுதியான பலரைப் பற்றியது. இவர்களைப் பொறுத்தவரை நல்ல சேவை (service) உம் நியாயமான விலையும் முக்கியமானது. இவர்கள் யாரிடமும் ஏமாறாது நியாயமான விலைக்கு வாகனத்தை வாங்க வேண்டும் என்பதே எனது குறிக்கோளாகும். இப்படியானவர்களுக்கு எனது Honda sales இல் 4 வருடமாக பெற்ற அனுபவங்களைக் கொண்டு சில குறிப்புக்களை தர விரும்புகிறேன்.

1) தரகர்களை நம்பாதீர்கள்:-

தரகர் மூலம் சிலர் வாகனங்களை வாங்கச் செல்கின்றனர். தரகர் உங்கள் மூலம் பெரும் தொகையை இலாபமாகப் பெறுவது உங்களுக்கு புரியாத ஒன்று. உங்கள் உறவுகள், நண்பர்கள் சிலரே தரகர்களாக செயற்படுகின்றனர். அது உங்களுக்கு புரியாத ஒரு புதிராகவே இருக்கும். என்னிடமே எத்தனையோ பேர் தங்கள் உறவுகளுக்கோ நண்பர்களுக்கோ வாகனம் தேவை. அவர்களை கூட்டி வருகிறேன். தனக்கு $500 தரவேண்டும், $1000 தரவேண்டும் என்று வருகின்றனர். அப்படியானவர்களை நான் முழுமையாக தவிர்க்க விரும்புவது மட்டும் அல்லாமல் முழுமையாகவும் வெறுக்கின்றேன். தங்கள் உறவுகள் நண்பர்களுக்கோ துரோகம் செய்யும் இவர்கள் மனிதர்களே அல்லாதவர்கள். இப்படி உறவுகள், நண்பர்கள் மூலம் சென்று ஏமாற்றுபவர்கள் ஒன்றல்ல இரண்டல்ல ஏராளம். அவர்களில் நீங்களும் ஒருவராக இருக்காதீர்கள்.

2) நீங்கள் விரும்பும் வாகனத்தை ஒரு தமிழ் விற்பனையானிடம் வாங்குங்கள். உங்களில் பலர் செய்வது என்னவென்றால் முதலில் தமிழ் விற்பனையாளனிடம் சென்றவிட்டு பின்னர் அவரின் விலையை விட சிறிய ஒரு தொகைக்காக மாற்று இனத்தவரிடத்தில் வாங்குவது. இனிமேல் ஒன்றில் நம்பிக்கையுடன் எமது இனத்தவரிடத்தில் வாங்குங்கள். அல்லது மாற்று இனத்தவரிடத்தில் விலையை விசாரித்து விட்டு எம்மினத்த வரை அணுகுங்கள். ஏன் எம்மினத்தரிடம் வாங்குங்கள் என்று சொல்கிறேன் என்றால், உங்களுக்கு பிற்காலத்தில் ஏதும் சிக்கல்கள் வரும்போது உங்களுக்காக உதவுவார்கள். சேமிப்பை முற்று முழுதாக பெற்றுத் தருவார்கள். தமிழ் மக்களுக்காகவும், தமிழ் மக்களின் நிறுவனங்களுக்காகவும் உதவுவார்கள். நாம் வாகனம் வாங்கும் போது கிடைக்கும் பணம் நம் ஒருவருக்கு கிடைக்கட்டுமே.

3) கண்களை மூடிக் கொண்டு எதிலும் கையெழுத்து இடாதீர்கள். விளங்கிக் கொண்டு கையெழுத்தை இடுங்கள். உங்களால் கட்டமுடியுமா என்று யோசியுங்கள்.

தந்தது

சோதீஸ் (416) 704 - 1179


# விளையாட்டுத் தகவல்கள் (78)

-எஸ். கணேஷ்



**ROLAND GARROS (PARIS)**
**KUERTEN AND JENNIFER பாரிஸ் OPEN வெற்றி!**
**TENNIS (ரெனிஸ்)**
**MAGICAL GUGA வெற்றி மூன்றாவது தரம்!**

உலகத்தில் ரெனிஸ் ஆட்டப் போட்டிகளில் GRAND SLAM TITLEஇல் முதன்மை வாய்ந்தது French Open ஆகும். இவ் French Open அதிக பணம் புழங்கும் Roland Garros என அழைக்கப்படுகின்றது. இது பாரிஸ் நகரில் கடந்த June 10 ஆம் திகதி சிறப்பாக நடந்து முடிந்தது. Grand Slam Title இல் முதலில் நடைபெறுவது அவுஸ்திரேலிய Open, அடுத்து French Open, விம்பிள்டன், US Open, ஒவ்வொரு வருடமும் நடைபெறும். இப் போட்டிகளில் French Open, Clay Court இல் விளையாடுவதால் தனிச்சிறப்பு பெறுகின்றது.




பிரேசில் நாட்டைச் சேர்ந்த 24 வயதுடைய உலகத்திலேயே முதல் தரத்தில் உள்ள (No.1) Gustavo Kuerten மூன்றாவது முறையாக French Open இனை வென்று உள்ளார். இவ் வெற்றியை பெற்றதன் மூலம் உலகத்திலேயே பாரிஸ் Open இனை மூன்று தடவைகளுக்கு வென்றவர்கள் பட்டியலில் Bjorn Borg (ஆறு தடவைகள்), Lendl (ஐந்து தடவைகள்) Mats Wilander (நான்கு தடவைகள்) Kuerten (மூன்று தடவைகள்) இணைந்துள்ளார்.

உலகத்தில் முதல் தரத்தில் உள்ள Kuerten French Open போட்டிகளில் வெல்லுவார் என்று பலராலும் விரும்பப்பட்டது. பிரேசில் நாட்டைச் சேர்ந்தவர் ஸ்பெனில் மொழி பேசத் தெரிந்தவர்கள் பலராலும் பாரிஸ் நகரில் Gastavo Kuerteh "GUGA" என்று செல்லமாக அழைக்கப்படுவார். 24 வயதுடைய Kuerten, 27 வயதுடைய Alex Corretja ஐ 6 - 7, 7 - 5, 6 - 2, 6 - 0 என்ற அடிப்படையில் வெற்றி கொண்டார். 1997 ஆம் ஆண்டு Sergi Bruguera ஐயும், 2000 ஆண்டு Macnus Norman ஐயும், 2001 ஆம் ஆண்டு Corretja ஐயும் வென்று உள்ளார். French Open என்றவுடன் எல்லோர் மத்தியிலும் சிவந்த மண் ஞாபகம் வரும். Clay Court இல் சிவந்த மண் புழுதியுடன் பிரேசில் நாட்டு Samba மேளங்களுடன் Roland Garros வெற்றிக் கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டார். ஆனால் அடுத்து வரும் Grand Slam Title ஆன விம்பிள்டன் போட்டியில் காலில் ஏற்பட்டுள்ள சுகவீனத்தால் கலந்து கொள்ளமாட்டார் என்ற செய்தி ரெனிஸ் இரசிகர்களை கவலையில் ஆழ்த்தியுள்ளது. இவர் உண்மையிலேயே "King Of Clay" என்று வர்ணிக்கப்படுவதற்கு சாலப் பொருந்தும். ஏனெனில் இதுவரை Clay Court இல் 47 தடவைகள் ஆடி 44 தடவைகள் வென்று உள்ளார். இறுதியாட்டத்தில் முதல் செற்றில் 6 - 7 என்ற நிலையில் தோல்வியுற்றாலும் அடுத்த மூன்று செற்றிலும் சிறப்பாக ஆடி வெற்றி பெற்றார். இவ்வெற்றி கிண்ணத்தை வென்றதன் மூலம் $590,000 இலட்சம் US டொலர்களை பெற்றுக் கொண்டார்.

**பெண்கள் பிரிவில் JENNIFER CAPRIATI வெற்றி!**

விறுவிறுப்பாக நடைபெற்ற இறுதிப் போட்டிகளில் Jennifer, Kim Clijsters ஐ 1 - 6, 6 - 4, 12 - 10 என்ற ரீதியில் வெற்றி பெற்றார். முதல் செற்றில் தோல்வி கண்ட இவர் அடுத்த செற்றில் வெற்றி பெற்றார். ஆனால் மூன்றாவது செற் 12 - 10 புள்ளிக்கு போய்யுள்ளது என்றால் இதன் விறுவிறுப்பை நாம் கண்டு கொள்ளலாம்.

உலகத்தில் (No.4) நாலாவது தரத்தில் உள்ள ஜெனிபர் 2001 ஆண்டில் அவுஸ்திரேலிய Open க்கு அடுத்த Grand Slam Title இலும் (French Open) வெற்றி பெற்று தனது திறமையை மீண்டும் நிருபித்துள்ளார். சில வருடங்களாக ரெனிஸ் உலகில் இருந்து ஒதுக்கப்பட்ட ஜெனிபர் மீண்டும் " வாழ்வாசாவா" என்று போராடி வெற்றிகளை குவித்து வருகின்றார். சில வருடங.களுக்கு முதல் ரெனிஸ் உலகமே ஜெனிபரை மறந்து இருந்த போது அடுத்து இரண்டு Grand Slam Titles ஐ வென்றதன் மூலம் தனது



திறமையை மீண்டும் நிருபித்துள்ளார். இப்போது 24 வயதுடைய இவர் Florida மாநிலதைச் சேர்ந்த அமெரிக்கர் ஆவார். இவர் French Open இல் வெற்றி பெற்ற 18 வயதுடைய Clijster க்கு எதிராக பெறப்பட்டது ஆகும். 18 வயதுடைய Clijster மிகவும் விட்டுக் கொடுக.கமால் திறமையாக இச் சுற்றுப் போட்டியில் விளையாடியது சிலருக்கு ரெனிஸ் உலகத்தில் சிறந்த எதிர்காலம் உண்டு என்பதை எடுத்துக் காட்டுகின்றது.


ரதீக்கா நகை மாளிகை

உங்கள் விருப்பமோ குறைந்த விலையில் வாங்குவது,
**எங்கள் விருப்பமோ** இனிமேல் யாரும் குறைக்க முடியாத விலையில் தருவது

உங்கள் விருப்பமோ இந்தநகைகளை எங்கே வாங்கியது என நண்பர்கள் கேட்பது, **எங்கள் விருப்பமோ** ரதீக்காவில் வாங்கியது என நீங்கள் பெருமை உடன் சொல்வது

இப்பொழுது புதிதாக அமைக்கப்பட்ட மிகப்பிரமாண்டமான காட்சியறையில் ரதீக்கா நகைமாளிகை உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது.

உங்கள் விருப்பமோ குறித்த தவணையில் பெறுவது,
**எங்கள் விருப்பமோ** ஒருநாள் ஏனும் முந்தியே தருவது

தாலிக்கும் நகைகளுக்கும் ஓடர் கொடுத்தாச்சு, காரை எடு இனிக் கூறை [illegible]வலைப் பார்ப்பம் என்று அலைய வேண்டாம். **ரதீக்கா நகை** மாளிகையும் **மஞ்சுளாபஷனும்** ஒரே இடத்தில்.

5635 Finch Ave. East, Unit 3
(Finch and Tapscott), Scarborough, Ont.,
M1B 5K9, Canada

☎: (416) 299-1343



யோகா சோதிடம்

★ கிரகப் பொருத்தம் பார்த்தல்
★ சுபமுகூர்த்தம் கணித்தல்
★ சாதகக்குறிப்புக் கணித்தல்
★ பலன் பார்த்தல்

☎: (416) 299-8361

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1931 ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான படங்கள்

**–தொகுப்பு - பரம்**

*1985ஆம் ஆண்டு வெளிவந்த படங்கள்*

60. சிவப்பு நிலா
61. சிதம்பர ரகசியம்
62. சுகமான ராகங்கள்
63. செயின் ஜெயபால்
64. செல்வி
65. சொன்னா நம்பமாட்டீங்க
66. தண்டனை
67. தவம்
68. தங்க மாமா
69. திறமை
70. தெய்வப் பிறவி
71. தென்றலே என்னைத்தொடு
72. தென்றல் தொடாத மலர்
73. நல்லதம்பி
74. நவக்கிரக நாயகி

7[illegible]ம்

76. நாம் இருவர்
77. நாகம்
78. நான் உங்கள் ரசிகன்
79. நான் சிகப்பு மனிதன்
80. நானே ராஜா நானே மந்திரி
81. நீதியின் நிழல்
82. நீதியின் மறுபக்கம்
83. நேர்மை
84. படிக்காதவன்
85. பந்தம்
86. பகல் நிலவு
87. பட்டுச்சேலை
88. பணம் பத்தும் செய்யும்
89. படிக்காத பண்ணையார்

'பந்தம்' பாலாஜியின் தயாரிப்பில் வெளிவந்த படம். இதில் Baby ஷாலினி நடித்திருந்தார். முதல் முதலில் ஆனந்தபாபு சிவாஜியுடன் நடித்த படமும் இதுவே. நீண்ட நாட்களுக்குப் பின் K.S. கோபாலகிருஷ்ணனின் கை வண்ணத்தில் உருவான படம் 'படிக்காத பண்ணையர்'. இதில் சிவாஜிக்குச் சோடியாக K.R. விஜயா நடித்திருந்தார். இப்படத்தின் சிறப்பான விடயம் K.R. விஜயாவின் 100 ஆவது படமாக அமைந்தது ஆகும். மற்றும் இவரின் முதல்படத்தை இயக்கிய K.S.Gயே இவரது 100ஆவது படத்தையும் இயக்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ராஜ ரிஷி



'நாம் இருவர்', 'நீதியின் நிழல், 'நேர்மை, ராஜரிஷி' ஆகிய படங்கள் பிரபுவும் கூடவே நடித்திருந்தார். நான் வாழவைப்பேன் படத்திற்குப் பின் சிவாஜியுடன் ரஜனி சேர்ந்து நடித்திருக்கும் படம் படிக்காதவன். அண்ணன், தம்பி பாசத்தை அடிப்படைக் கதையாக கொண்ட இப் படத்தில் நடிகர் ரஜனி காந்தின் நெருங்கிய நண்பரும் ஆகிய மோகன்பாபு இதில் இன்னொரு தம்பியாக நடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வேலவன் பிலிம்ஸ் ஆதரவில் சினிமாப் போட்டி

இப்போட்டியில் வெற்றிபெறும் முதல் மூவருக்கு **'வேலவன் பிலிம்ஸ்'** ஸ்தாபனத்தாரினால் திரைப்படத்திற்கான நுழைவுச்சீட்டு (Ticket) வழங்கப்படும்.

**சினிமா போட்டி # 9**

**1. 'ஆனந்தம்' படத்திற்கு இசையமைத்தவர் யார்?**

**2. அண்மையில் வெளிவந்த விசுவின் திரைக்கதை வசனம் டைரக்ஷனில் வெளிவந்த படம் எது?**

**3. 'கற்பூரதீபம்' படத்தின் கதாநாயகன் நாயகிகள் யார் ?**

***சினிமாப் போட்டி #8இன் விடைகள்***

1. பிரசாந் & சிம்ரான்
2. சிவாஜி, K.R. விஜயா
3. நேருக்கு நேர் & பிரெண்ஸ்



**போட்டி #7இல் வெற்றி பெற்றவர்கள்**


1) சசிகரன், ஸ்காபுரோ

விடைகளை July 15, 2001 இற்கு முன்பாக 'உலக தமிழோசை' இன் முகவரிக்கு அல்லது தொலைநகல்- Fax: (416) 282-4978 இற்கு அனுப்பலாம்.


# SUBA
DJ SERVICES

வண்ணக் கோலம்

திருமணம், பூப்புனித நீராட்டுவிழா, அரகேற்றம் மற்றும் அனைத்து சமய வைபவங்களுக்கும் அழகிய முறையில் கோலம் செய்து தரப்படும்.



☎: (416) 284 - 6121



Lowest Prices With Quality Satisfaction Guaranteed

**SABESAN'S**


சபேசன்ஸ்

**GENERAL & CUSTOM CONTRACTORS**


Roofing

Mattress

Living Room Sets



EVERYTHING YOU NEED YOUR HOME IMPROVEMENT UNDER ONE ROOF



Kitchen Cabinet

Flooring / Carpet

BED ROOM SETS

Leather Sofa

PAINT SALE

☎: (416) 605-1990 / 562-9090

**ANICKO INTERIOR INC**

390 Progress Ave., unit #4, Scarborough, ON

## 21 ஆம் நூற்றாண்டில் கணணி இல்லாமல் மனிதன் வாழமுடியுமா?

-ராஜா சொக்கலிங்கம் raja@systemsplus.net
*Computer consultant*



பகுதி 28

### வீட்டுக் கணணியின் பராமரிப்பு

பராமரிப்பு என்ற இந்தச் சொல் எந்த ஒரு கருவிக்கும் முக்கிய பொருளை கொடுக்கின்றது. எந்தவொரு கருவியையும் சரியான முறையில் பராமரிக்க வேண்டும். மதிப்புக் கொடுக்க வேண்டும். அதை நினைத்துப் பார்க்க வேண்டும் என்பதற்காகத் தான் நமது நாடுகளில் ஆயுத பூசை என்று சொல்வோம். ஆயுதங்களுக்கென்றே ஒரு தெய்வ வழிபாட்டைக் கொண்டிருக்கின்றார்கள். இந்த பராமரிப்பு ஒவ்வொரு கருவிக்கும் அதனுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி வாழ்நாளை அதிகரிக்கின்றது. அதனுடைய பயன்பாட்டைப் பெருக்கி நமக்கு பயனுள்ளதாக்கின்றது. எடுத்துக் காட்டாக உங்களுடைய வாகனம் கார் இதை சரியான முறையில் நீங்கள் பராமரிக்கும் தன்மையில் உங்களுக்கு அது பன்மடங்கு பயனைத் தருகின்றது. சிறந்த உபயோகத்தை கொடுக்கின்றது. அத்துடன் உங்களை துன்பத்தில் இருந்து விடுவிக்கின்றது. உங்களின் நண்பனாக உங்களுடன் உழைக்கின்றது. இதே போலத்தான் கணணியும். கணணியை நீங்கள் எவ்வளவு சிறப்பாக பராமரித்து மதித்து வருகின்றீர்களோ அவ்வளவிற்கு அது உங்களின் நண்பனாக உங்களிடம் இருக்கும்.

பராமரிப்பு என்பது என்ன? எந்த வழியில் உங்கள் கணணியைப் பராமாரிக்க வேண்டும். துடைத்து தூசி இல்லாமல் வைப்பது மட்டும் பராமரிப்பு இல்லை. கணணியைப் பொறுத்த வரை உள்ளே இருக்கும் Program கள் அவை எந்தெந்த வழியில் குறைகளை கொண்டு இருக்கின்றது என்று பார்த்து அதை நிவர்த்தி செய்து வைத்தாலே உங்களது கணணியின் வேகம் சிறப்பாக அமைந்து உங்களுக்கு ஒரு இன்பத்தைத் தரும். பராமரிப்பின் முக்கிய கட்டங்கள் சிலவற்றைப் பார்ப்போம்.

1) உங்களுடைய கணணியை தொடர்ந்து மிக அதிக நேரம் பாவித்தால் எந்தத் தவறும் இல்லை. ஆனால் அதற்கு மாறாக அதை அடிக்கடி மிகக் குறுகிய நேரத்தில் off/on செய்வது அதாவது அடிக்கடி நிறுத்தி மீண்டும் போட்டு பராமரிப்பது நல்லதல்ல. கணணிலை தொடர்ந்து பல மணிநேரம் ஒடவிடலாம். அதில் எந்த விதமான தவறும் இல்லை.

2) உங்களுடைய கணணியின் Program கள் உள்ள அந்த Hard drive இன் பராமரிப்பு மிக முக்கியம். பதிவுப் பெட்டகம் என்று சொல்லப்படும் Hard drive இல் நம்மால் ஏற்படுத்தப்பட்டதும் கணணியால் ஏற்படுத்தப்பட்ட file களும் folder களும் ஒழுங்கின்றி இருக்கின்றது. இவைகளை ஒழுங்குபடுத்தி வைப்பதும் ஒரு பராமரிப்பு ஆகும். இதற்கு scan disk அல்லது Defray என்பவற்றை பாவிக்கலாம். இதை மாதம் இரண்டு முறை அல்லது மாதம் ஒரு மறை scan disk அல்லது defray செய்வது நல்லது.

சிறந்த கணணியின் இயக்கத்திற்கு இந்தப் பதிவுப் பெட்டகம் என்று சொல்லக் கூடிய Hard drive இன் மூன்றில் ஒரு பகுதி அல்லது குறைந்தது நான்கில் ஒரு பகுதி free ஆக இருக்க வேண்டும். அதாவது நிரப்பப்படாமல் இருக்க வேண்டும். ஏனென்றால் கணணி தான் இயங்குவதற்கு குறிப்பிடப்பட்ட இடத்தை வைத்துக் கொள்ளும். அந்த இடங்களாக மூன்றில் ஒரு பாகம் free இருந்தால் தான் உங்கள் கணணியின் வேகம் ஒழுங்காக இருக்கும். உங்கள் Hard drive இல் 80 அல்லது 90 சதவீதம் பதிவுகளை செய்து நிரப்பிவிட்டீர்கள் என்றால் அடிக்கடி கணணி freeze ஆகும். ஒரு கணணி freeze ஆகின்றது என்றால் முதலில் நீங்கள் பார்க்க வேண்டியது உங்களுடைய Hard drive இல் எவ்வளவு இடம் free ஆக இருக்கின்றது. அப்படி free ஆக இல்லாதவிடத்து எவற்றை அகற்றி Hard drive இன் இடத்தை free ஆக்க வேண்டும் என்பதை அறிந்து கொள்ளவேண்டும்..

முதலில் நீங்கள் தேவையில்லாத program களை எடுத்து விடுங்கள். இது மிக முக்கியம். நீங்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கும் program கள் மிக முக்கியம். எப்போதோ பயன்படுத்தப் போகிறோம் என்பதற்காக இப்பொழுதே சிலர் அந்த program களை பதிவு செய்து வைத்திருப்பார்கள். அது தேவையற்றது. இதனால் உங்கள் கணணியின் வேகம் குறையும். நீங்கள் அந்த program ஐ பாவிக்கும் காலம் வரும்போது இப்பொழுது உள்ளதை விட புதிய version கிடைக்கக் கூடும். அதாவது இப்பொழுது அதை சேமித்து வைப்பது என்பது கணணி உலகத்தை பொறுத்த வரை தவறு என்று தான் சொல்ல வேண்டும். அதையும் நேரடியா போய் அழிப்பது என்பது தவறு.

ஒழுங்கான முறையில் Uninstall செய்ய வேண்டும். Start setting, control panel add / remove program. இந்தப் பகுதிக்கு சென்று இந்த படிவத்தில் உள்ள program களில் எவை தேவை இல்லையோ அதை குறைத்து Add / remove button களை அழுத்தினீர்கள் என்றால் அந்த program ஒழுங்கான முறையில் கணணியில் இருந்து அகற்றப்படும். இது தான் சிறந்த வழியும் முறையான வழியும் ஆகும்.. இப்படி செய்யாது directory களையோ file களையோ அழிந்துவிட்டீர்கள் என்றால் இது பல வழிகளில் computer இயக்கத்தை தடைப்படுத்தும். அத்துடன் பல error message களை தரும். ஒழுங்கான முறையில் uninstall செய்வத ஒரு வகை பராமரிப்பு.

அதற்கு அடுத்தாற் போல் உங்களுக்கு தேவை இல்லாத temporary folder களில் உள்ள file களை நீங்கள் அழிக்கலாம். C drive இல் அல்லது windows directory இல் உள்ள TMP அல்லது temp என்ற பெயரில் உள்ள folder களில் காணப்படும் எந்த file உம் நேரடியாக தினந்தினம் பயன்படுத்துவதில்லை. அதற்குத் தான் temporary file கள் என்று பெயர். அந்த folder களில் உள்ள file கள் எப்பொழுதும் அழிந்து விடலாம். இதற்கு


அடுத்த படியாக internet temporary files ஐப் பற்றி பார்ப்போம். C drive இல் windows directory இக்குள் temporary internet file என்ற folder காணப்படும் எத்தனை file களும் temporary ஆக internet இக்குப் பயன்படுத்துவற்கா உள்ள file கள். இவைகளையும் நீங்கள் எப்பொழுதும் அழித்து விடலாம். இதற்கு அடுத்தால் போல் உங்களுடைய recycle bin இதை எப்பொழுதும் அதிகம் சேர விடாமல் empty recycle bin செய்து வைத்தீர்கள் என்றால் அதுவும் உங்களுடைய கணணியின் பராமரிப்புக்குச் சிறந்ததாகும். இவைகள் யாவையும் முடித்து விட்டு scan dish அல்லது defray இவைகளையும் செய்து வைத்து விட்டால் உங்களுடைய கணணி சற்று நன்றாகவே இயங்கி உங்களுக்கு சிறந்த பயனைத் தரும் என்பதில் ஐயமில்லை.

**SYSTEM PLUS**
www.systemsplus.net
T.P (416) 321 - 5995
இதில் வரும் சந்தேகங்களையோ அல்லது எந்தத் துறையைப் பற்றி எழுதலாம் என்று நினைக்கிறீர்களோ என்பதைப் பற்றி "உலக தமிழோசை"க்கு நீங்கள் அறியத்தரவும்.
vlambaram.@email.com

#### தெரிந்து கொள்ளுங்கள்

- ஆர்க்கிமிடிஸ் விதி - **(Archemedes Law)** ஒரு திடப்பொருள் முழுவதும் ஒரு திரவத்தினுள் மூழ்கியிருக்கும்போது அதற்கு ஏற்படும் தோற்ற எடை நஷ்டம் அப்பொருளின் கன அளவுள்ள திரவத்தின் எடைக்குச் சமம்.


கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளத்தினரின்
விருது பெற்ற
VIVEKA
PRINTERS



உங்கள் அச்சுவேலைகள் எதுவாக இருந்தாலும் முதலில் நீங்கள் நாடவேண்டிய இடம்
80 BARBADOS BLVD., UNIT #4
SCARCOROUGH, ONT.
☎ (416) 410-6401

## அந்நியர்கள்:- அடையாளங்கள்

தருபவர்:- கனி



இன்றைய நாளில் உலகின் பல பாகங்களிலும் வருடம் ஒன்றிற்கு சுமாராக ஆயிரம் UFO பதிவுகளும் ஏலியன் (ALIEN) தொடர்பான செய்திகளும் பதிவாகின்றன. அமெரிக்காவில் இருபது வீதமானவர்கள் இந்த ஏலியன்கள் உண்மை என நம்புகிறார்கள். இன்னமும் சிலர் ஒருபடி மேலே போய் இந்த ஏலியன் (ALIEN) களுக்கு விழா எடுக்கின்றார்கள். ரெக்ராஸ் மாநிலத்தில் ஒரு ஏலியன் (ALIEN) கிராமத்தையே உருவாக்கி வைத்திருக்கிறார்கள். ஏழு நாட்களுக்கு நடைபெறும் இந்த ஏலியன் விழாவில் சில புத்த கிறிஸ்தவ போதகர்களும் கலந்து கொள்கிறார்கள். தங்கள் அநுபவங்களைப் பகிர்ந்து கொள்கின்றார்கள் என்பது பெரிய விடயம் இன்று மட்டும் தானா? அல்லது எம் முன்னவர் காலத்திலும் இருந்ததா? ச[illegible] யோசித்துப் பார்க்கப்.... பல விடயங்கள் எமது சிந்தனையில் [illegible]பட்டு வெளிவரும்.

19 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலேயே பறக்கும் தட்டுக்களும், விண்வெளி மனிதர்களும் மனித இனத்தின் சிந்தனைக்குள் வந்துவிட்டது. இதற்கு முன்னதாகவே எம் முன்னவர்கள் இவ்விடயத்தை வேறு வடிவில் எம்முன் புகுத்திவிட்டார்கள் என்பது எனது எண்ணம். எம்மால் சரிவரப் புரிந்து கொள்ள முடியாத அவ்விடயம் சமயம் (மதம்) ஆகும். ஒவ்வொரு சமயத்தினரும் தமது சமயக் கொள்கைகளுக்கும், நம்பிக்கைகளுக்கும் சான்றுகளையும் அல்லது புராணங்களையும் வைத்திருக்கின்றார்கள். இச் சான்றுகள், புராண நாயகர்கள் எல்லாம் கூட ஏலியன் தொடர்புடையதாக இருக்குமே என்பது எனது ஐயம். இவ்விடயங்களைக் கொஞ்சம் அலசிப் பார்த்தால் எனது ஐயம் எவ்வளவு உண்மை என்பது புரியும்.

கிறிஸ்தவர்களது விவிலியம் (பைபிள்) ஒரு சரித்திரப் பதிவேடு என்பது உலக சரித்திர ஆய்வாளர்கள் பலரது அபிப்பிராயம். விவிலியத்தில் கூறப்பட்டுள்ள பல விடயங்களை நவீன கருவிகள் யுக்திகளுடன் துருவித் துருவி ஆய்வு செய்கிறார்கள். சேதோம் கொமார பட்டணங்களின் அழிவு, நோவாவின் காலப் பிரளயம், பேழை, இயேசுவின் பிறப்பை அறிவித்து கிழக்கின் ஞானிகளுக்கு வழிகாட்டிய நட்சத்திரம், மேசேயிற்கு யேகோவா வழங்கிய பத்துக் கட்டளைகள் இஸ்ரவேலருக்கு வழி விலகிய செங்கடல்.... இது போன்ற பல விவிலிய விடயங்களை ஆராயும் ஆய்வாளர்கள் பலர். இந்த பைபிளில் கூட ஏலியன்கள் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. ஒரு இடத்தில் அல்ல, பல இடங்களில். ஆனால் சொல்லப்பட்ட முறை வடிவம் தான் வித்தியாசம். உதாரணத்திற்கு விவிலியத்தின் ஆதியாகமம் 6ஆம் அதிகாரத்தின் 2ஆம், 6 ஆம் வசனங்களைப் பார்ப்போம்.

> [illegible]வ குமாரர் மனுச குமாரத்திகள் அதிக சவுந்தரிய முள்ளவர்க [illegible]ளென்று கண்டு, அவர்களுக்குள்ளே தங்களுக்குப் பெண் தெரிந்து கொண்டார்கள்" (ஆதியாம் 6:2)

> " அந்நாட்களில் இராட்சதர்கள் பூமியிலே இருந்தார்கள். பின்பு தேவகுமாரர் மனுச குமாரத்திகளோடு கூடுகிறதனால் இவர்கள் அவர்களுக்கு பிள்ளைகளைப் பெற்ற போது இவர்களும் பூர்வத்தில் பேர் பெற்ற மனுசராகிய பலவான்களானார்கள்" (ஆதியாம் 6:6)

இவ்விரண்டு வசனங்களின் படியும் பூமியிற்கு பூமியில்லாத வேறு எங்கேயோ இருந்து சிலர் வந்துள்ளார்கள். தேவகுமாரர்கள் எனக் குறிப்பிடப்பட்ட இவர்களும் பூமியிற்கு அந்நியர்கள். அதாவது ஏலியன்கள் என்பது ஒத்துக் கொள்ளப்பட வேண்டிய உண்மையாகிறது. கடவுளின் குமாரனாகிய முருகன் குறமகள் வள்ளிமேல் மையல் கொண்டு பூமிக்கு வந்து வள்ளியைத் திருமணம் செய்த கதை இந்துக்களிடம் உண்டு. இதிகாச நாயகர்கள் பஞ்ச பாண்டவர்கள் பாண்டுவின் புதல்வர்கள் இல்லை. தேவர்களின் புத்திரர்கள் என பாரதம் கூறுகிறது. ஏன் இராமன் கூட தசரதனின் சொந்தப் பிள்ளை இல்லை எனும் வகையில் தான் இராமயாணத்தில் கூறப்பட்டுள்ளது. தேவலோக அதிபதி இந்திரனிடம் ஐராவதம் பெற்ற உதயணனின் தந்தை கூட ஒரு கடவுள்தான எனக் கூறுகின்றார்கள். ஆக இவை எல்லாம் எம் முன்னவர்கள் எமக்களித்த "ஏலியன்" விடயங்களைப் பற்றிய செய்திகள் என்று ஆகிறது.


நியூ மிலேனியத்தில்
ஸ்காபரோவில் 10 வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க
வாகனத்திருத்த வேலைகளுக்கும் நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

Also Air Conditioning Service & Repair


NTE AUTO INC.
New Trade Engineering

என். ரீ. இ. ஓட்டோ இங்க்

Contact: Sivabalan சிவபாலன்

Tel: (416) 750 - 1573

151 NANTUCKET BLVD., UNIT #12, SCARBOROUGH, ONT.



In New Millennium We are entering 9th year service in Scarborough




தமிழர்கள் மத்தியில் பலவருட அனுபவம் மிக்கவர்களால்
ஆரம்பிக்கப்பட்டுள்ள புதியதோர் வெதுப்பகம்

BREAD MASTER BAKERY

பிறட் மாஸ்ரர் பேக்கரி

மொத்த ஓடர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்



ரோஸ் பாண் கிடைக்கும்

பாண், பனிஸ், றோல்ஸ் அனைத்தும் சுடச்சுட எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

வாரத்தில் 7 நாட்களும்

3 for 0.99¢

31 TAPSCOTT ROAD, UNIT #B3

LOWER LEVEL, MALVERN TOWN CENTRE - SCARBOROUGH

TEL: (416) 299-5083

# 7TH ANNIVERSARY SPECIAL

# Safety Truck

## Training School Ltd.

### A Z License FULL COURSE

**Limited Time Special**

**June 01, 2001 to June 30, 2001 ONLY**

கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம்
(7ம் ஆண்டு) வாரத்தில் எழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.




தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும். (One on One Training) அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

**We accept Welfare & Unemployment Insurance**

## In Classes

- Medical Exam
- Exam Fee
- Air Brake Endosement
- Dangerous Goods
- P. D. I. C.
- Border Crossing
- Log Books
- Road Test

PRICE INCLUDED

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்

## YOGAN SOCKALINGAM

Truck Driving போதனாசிரியர்

( 14 Years Canadian Experience with Trucks)

## Tel: (905) 793-9546 / (416) 616-5979

250 SUMMERLEA ROAD, BRAMPTON, ON.

## ஒரு சாதாரண மனிதனின் சிந்தனையில்....



## பெற்றோர் பிள்ளைகளுக்குப் பாரமா?!
### பிரச்சனை தீர வழி

எமது தாயக மண்ணில் வாழ்ந்து வந்த காலத்தில், எமது தமிழ் மக்களிடையே உயர்ந்த பண்பும், நல்ல பண்பாடும் உண்மை அன்பும் பாசமும் வேரூன்றி இருந்தது. எனறு எமது மண்ணில் வெடி குண்டுகள் வெடித்து சிதறத் தொடங்கியதோ அன்று தமிழர்களின் நல்வாழ்வும் சிதறி உலகெங்கும் பறந்து பல பாகங்களிலும் வேரூன்றி வாழத் தலைப்பட்டு வருகின்றது. உழைக்கும் பணத்தின் முக்கியத்துவமே உண்மை அன்புக்கும் பாசத்திற்கும் மேலாக நின்று எல்லோரையும் ஆட்டிப் படைக்கின்றது. விரும்பியோ விரும்பாமலோ பெற்ற பிள்ளைகளிலேயே தங்களது வாழ்க்கையும் தங்கி இருக்க வேண்டிய பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டனர். அப்படிப்பட்ட பெற்றோரை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். முதலாவதாக பெற்றோர்கள் பிள்ளைகளின் ஏகோபித்த அன்பும் பாசமும் கிடைக்கப் பெற்று, பெற்றோர் முக்கியத்துவத்தைப் பிள்ளைகளால் உணரப்பட்டு, அவர்களால் பாதுகாப்பாகப்படுவர்கள்.

இரண்டாவது வகையான பெற்றோர், பிள்ளைகளினால் சுய நல தேவைகளுக்காக மட்டும் பாவிக்கப்பட்டு, உதாரணமாக வீட்டில் சமையல் வேலை செய்வதற்கும், பேரப்பிள்ளைகளை பராமரிப்பதற்கும், பெற்றோருக்குக் கிடைக்கும் அரசாங்க உதவிப் பணத்தை பெற்று பணம் சேர்க்கவும் முடிவில் மேற் சொன்ன விடயங்களை பெற்றோரினால் ஆகவில்லை என்றால் பிள்ளைகளினால் தூற்றப்பட்டு மனம் நொந்து இறப்பை ஆவலுடன் எதிர் பார்த்து காத்து இருப்பவர் என்றும் சொல்லலாம். இவ்வாறு இரண்டு வகையான பெற்றோர் உருவாகக் காரணம் என்ன?

> "தினை விதைத்தவன் தினை அறுப்பான்
> வினை விதைத்தவன் வினை அறுப்பான்"

என்பது முதுமொழி. இது பிள்ளைகளை வளர்ப்பதற்கும் பொருந்தும்.

உடலில் ஓடுகின்ற இரத்தத்தில் உண்மையான அன்பும், பாசமும், நேர்மையும் கண்ணியமும் காணப்படாவிட்டால் வாழ்க்கையில் துன்பமே மிஞ்சும் என்பதை பலர் மறந்து விடுகிறார்கள். பணத்தாசை கண்ணை மறைத்ததும் அன்பும் பாசமும் நேர்மையும் கண்ணியமும் அவர்களை விட்டு ஓடி விடுகின்றது. இளமையாக இருக்கும் போது சுயநலமே முக்கியமாக கொண்டு உண்மை அன்புக்கும் பாசத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்காமல் விட்டு விடுகிறார்கள். அதன் பயனாக முதுமை அடைந்ததும் நமது இரத்தத்தில் பிறந்த பிள்ளைகள் நாம் நடந்து வந்த பாதையை நன்றாக அவதானித்து நாம் மற்றவர்கக்கு செய்ததை நமக்கு திருப்பி செய்வார்கள் என்பதை உணர்ந்து கொண்டால், பிள்ளைகளினால் அவமதிக்கப்படும் பெற்றோர்கள் இந்த மண்ணில் உருவாக மாட்டார்கள். நாம் வாழும் முறையைத்தான் எமது பிள்ளைகளும் தொடர்வார்கள் என்ற உண்மையை கருத்தில் கொண்டு நாம் வாழ தலைப்பட வேண்டும். வாழ்க்கை வாழ்வதற்கே என்று எமது வாழ்க்கை சரியாக வாழ்ந்தால் பிள்ளைகளின் வாழ்க்கையும் சரியாக அமையும். பிள்ளைகளுக்கு என்று ஒரு வாழ்க்கை இருப்பதால் எமது பொறுப்புகளை அவர்கள் மீது செலுத்தாமல் நாம் பார்த்துக் கொள்ள வேண்டும். அவர்களை அவர்களது வாழ்க்கை காலம் முழுவதும் பொறுப்பை சுமக்க வைக்க கூடாது.

எனக்கு பழக்கமான ஒருவர் இருக்கின்றார். அவர் விரும்பினால் இன்னும் 15, 20 வருடங்கள் வேலை பார்க்க வேண்டிய வசதி அவரிடம் இருக்கின்றது. அவர் மிக இளமையில் திருமணம் செய்து கொண்ட படியால் அவரது மகன் தொழில் கல்வி பயின்று பூர்த்தி செய்யும் நிலையில் இருக்கின்றார். அவர் பேசும் போது சொல்வார் நான் இன்னும் ஒரு வருடம் வேலை செய்தால் போதும் எனறு. ஏன் என்று கேட்டால் மகன், தான் படித்து முடித்து வேலை பார்க்கத் தொடங்கி விட்டால் நீங்கள் வேலை செய்யத் தேவை இல்லை என்று சொல்லுகிறார். அதனால் அவன் படித்து முடித்து வேலை செய்யத் தொடங்கினால், தான் வீட்டில் பேசாமல் இருக்கலாம் என்று மகன் சொன்னதை வைத்து பிள்ளையிடம் எதிர் பார்க்கும் 50 வயது கொண்டவரின் புத்தியை என்ன என்று சொல்வது?

